JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 56 |
| NAME | : | திருமலை |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 03.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மாயவன் கோவிலில் நான் வேலை பார்த்தேன். அதனால் நம்பிக்கையாக அவர்களிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை அசா.2 அந்தோணிராஜ் தெரியாது. அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் . அசா,8 செல்வராணி ஆகியோரை தெரியாது. அசா.9 பூங்கொடி சூசை தெரியும் அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி அசா.13 சாந்தி அசா.14 குணசீலன் அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ் அசா.21 பொன் சேகர் அசா.22 சுதா அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன் அசா.31 அன்னபூரணி அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் அசா.33 முத்துக்கனியை அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் அசா.36 முருகன் அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய் அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45

கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது, அ.சா.49 மூக்கம்மாள் தெரியும் அசா.50 முருகன் அசா.51 ஐயப்பன் அசா.52 கவிதா தெரியாது. அசா.53 யோகேஸ்வரி ஆகியோரை தெரியாது. அசா.54 குமார் தெரியும். அசா.55 சரஸ்வதி பாப்பா என்பவரை தெரியும். 4,5 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். 2,3 குழுக்களாக சீட்டு நடத்தினார்கள். நான் ரூ.60000 சீட்டில் 2 சீட்டுகள் போட்டிருந்தேன். சீட்டு பணத்தை ஞாயிற்றுக்கிழமை தோறும் 6 முதல் 7 மணி வரை மாயவன் கோவிலுக்கு சென்று சீட்டு பணத்தை கொடுப்பேன். சீட்டு பணத்தை நான் கொடுக்கும் போதேல்லாம் எதிரிகள் வரவு வைத்து கொள்வார்கள். பின்னர் ஒரு வாரம் கழித்து பார்த்த போது சீட்டு பிரிக்கவில்லை. அங்கு பிரச்சினை நடந்தது. தற்செயலாக என் மனைவி அங்கு சென்ற போது பிரச்சினை நடந்தது. மொத்தமாக ரூ.15000 நான் கட்டி இருப்பேன். என் மகளின் திருமணத்திற்காக அன்றாடம் உழைத்த பணத்தை கொடுக்க நான் சீட்டு போட்டிருந்தேன்.

நான் எதிரிகளிடம் சென்று பணத்தை கேட்ட போது வழக்கு கோர்ட்டில் கிடக்கிறது அங்கு சென்று பார்த்து கொள் என்று சொல்லிவிட்டார்கள். நடவடிக்கை எடுக்க யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் அன்றாடம் வேலைக்கு சென்று விடுவேன். போலிசார் என்னிடம் விசாரிக்கவில்லை. என் மனைவியிடம் விசாரித்தனர்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சொந்த ஊர் வெய்க்காலிபட்டி என்றால் சரிதான். கோவிலில் இரண்டு வருடம் வேலை பார்த்தேன். எனக்கு வெய்க்காலிபட்டியில் ஓரளவு அனைவரையும் தெரியும் என்றால் பாதி நபர்களை தான் தெரியும். கோவிலில் நான் வேலை பார்த்ததாக சொல்லும் காலகட்டத்தில் கோவிலை யார் நிர்வாகம் செய்தார் என்றால் சார்வாள் தான் நிர்வாகம் செய்தார். கோவிலில் நிர்வாகஸ்தர் நிறைய பேர் உண்டு என்றால் சரிதான். மகேஷ் மாயவனும் ஒரு நிர்வாகஸ்தர் என்று சொல்வார்கள். பூங்கொடி சூசையின் கணவர் பெயர் தெரியாது. ஆனால் அவர் ஆண். பூங்கொடி சூசையின் தகப்பனார் பெயர் தெரியாது. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் போடவில்லை. என் மனைவி கையெழுத்து போட்டார்களா என்றால் போட்டிருக்கலாம். எத்தனை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என தெரியாது. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

புகாரில் எத்தனை பேர் கையெழுத்து போட்டார்கள் என தெரியாது. புகார் பகல் 12 மணிக்கு கொடுக்கப்பட்டது. சீட்டு என் பெயரில் போடப்பட்டது. ஒருவர் பெயர் வாத்தியார் என கூப்பிடுவோம். மற்றவர் பெயர் துரை. நான் போட்ட சீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் என தெரியாது. சீட்டு எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 4,5 வருடம் இருக்கும். போலிசாரிடம் எத்தனை வாரம் சீட்டு பணம் கட்டினோம், எவ்வுளவு கட்டினோம் என நானும், என்

மனைவியும் எழுதி கொடுத்தோமா என்றால் எழுதி கொடுத்தோம். ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு பணம் செலுத்தினோம், கழிவு போக எவ்வுளவு செலுத்தினோம் என போலிசாரிடம் எழுதி கொடுத்தோமா என்றால் எழுதி கொடுத்தோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் நானோ, எனது மனைவியோ ஒரு போதும் சீட்டு பணம் போட்டிருப்பது கிடையாது என்றாலும் எதிரி சீட்டு பணம் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சிஅளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த கோவிலில் நான் வேலை பார்த்தாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மொத்தம் எத்தனை வாரம் சீட்டு பணம் கட்டினோம் என்றால் தெரியாது. எவ்வுளவு தொகை செலுத்தினோம் என்றால் ரூ.60000 சீட்டிற்கு ரூ.15000 கட்டி உள்ளோம். இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். அந்த பணத்தை மாயவன் கோவிலுக்கு செலவு செய்வார்கள் என்றால் சரிதான். இதற்கு முன்பு நான் சீட்டு போட்டதில்லை. கழிவு தொகையை கையில் கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஏலம் கேட்பவர்களுக்கு அன்றைய தேதியிலே பணம் கையில் கொடுக்கப்படும் என்றால் சரிதான். ஏற்கனவே ஏலம் எடுத்தவர்கள் திரும்ப பணத்தை கட்டவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் இந்த வழக்கிற்கும், 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி எவ்வித சீட்டும் நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த எதிரியோ அவருக்கு வேண்டபட்டவர் யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல.

(1வது எதிரியின் குறுக்கு விசாரணை 2வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }
Miscellaneous } Case No : - CC// 563/2024
: Prosecution P.W - 55

NAME : சரஸ்வதிபாப்பா
FATHER'S NAME :
VILLAGE :
TALUK :
CASTE :
CALLING :
RELIGION :
AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 03.02.2026

**முதல் விசாரணை**

எனக்கு சொந்த ஊர் வெய்க்காலிபட்டி, மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் வயது முதிர்வு காரணமாக வேலை எதுவும் பார்க்கவில்லை, என் கணவர் இல்லாததால் என் மகளுடன் இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.என் உறவினர்கள். அவர்களிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும் அசா.2 அந்தோணிராஜ். அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியும் . அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி தெரியும். அசா.7 பாலமுருகன் . அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை தெரியும். அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி அசா.13 சாந்தி அசா.14 குணசீலன் ஆகியோரை தெரியும், அசா.15 முத்துலெட்சுமி தெரியாது, அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் தெரியாது அசா.18 ராமர் மனைவி சரோஜா தெரியும் அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ் அசா.21 பொன் சேகர் அசா.22 சுதா தெரியும், அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் தெரியும், அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன் அசா.31 அன்னபூரணி அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் அசா.33 முத்துக்கனியை அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் அசா.36 முருகன் ஆகியோரை தெரியும் அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி தெரியும்

அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய் அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது, அ.சா.49 மூக்கம்மாள் தெரியும் அசா.50 முருகன் அசா.51 ஐயப்பன் தெரியும் அசா.52 கவிதா தெரியாது. அசா.53 யோகேஸ்வரி, அசா.54 குமார் தெரியாது. கடந்த 10,12 வருடங்களுக்கு முன்பாகவே மாயவநாதனிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். சீட்டுநன்றாக தான் சென்று கொண்டிருந்தது. 2019 ம் வருடத்தில் ஆஜர் எதிரிகள் சீட்டை நிப்பாட்டிவிட்டார்கள். ஆஜர் எதிரிகள் 6,7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.60000 சீட்டில் 9 சீட்டுக்கள் போட்டிருந்தேன். 38 வாரங்கள் கட்டி இருப்பேன். மாயவன் கோவில் முன்பாக ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 6 மணிக்கு சீட்டு பணத்தை கொடுப்பேன். 7 மணிக்கு ஏலம் விடுவார்கள்.

என் வீட்டுக்காரர் பெயரிலும் சீட்டுபோட்டிருந்தேன். மொத்தமாக ரூ.1 லட்சத்திற்கு மேல் கட்டியிருப்பேன். ஜனவரி கடைசி வாரம் 2019 ம் வருடம் சீட்டு பிரிக்கவில்லை. எதற்காக சீட்டு பிரிக்கவில்லை என்று தெரியாது. ஆளே இல்லை. 6 மாதம் கழித்து எதிரிகள் வந்து விட்டார்கள். நாங்கள் போய் வழக்கு பேசியதற்கு நோட்டு எதுவும் தரவில்லை. சீட்டு பணம் கொடுத்த நோட்டு தரவில்லை. எனக்கு 3 பெண் குழந்தைகள். அவர்கள் கல்யாணத்திற்காக சீட்டு போட்டு நன்றாக தான் பணத்தை எடுத்தேன். கடைசியாக 38 வாரத்திற்கு சீட்டு பணம் தரவில்லை. தற்போது வரை நான் கட்டிய பணம் எனக்கு திரும்ப வரவில்லை. பாதிக்கப்பட்ட நபர்கள் அனைவரும் சேர்ந்து கடையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். நான் ஒரு புகார் கொடுத்தேன். என் கணவருக்கும் சேர்த்து கொடுத்தேன். அந்த புகாரில் என்னை தவிர வேறு யாரும் கையெழுத்துபோடவில்லை. நான் கொடுத்த புகாரில் எங்களுக்கு 9 சீட்டிற்கு பணம் தரவேண்டும் என சொல்லி கொடுத்தேன் என்றால் சரிதான். பூங்கொடி சூசையின் கணவர் பெயர் தெரியாது. நான் புகார் கொடுக்கும் போது நானும், என் கணவரும் சென்றோமா என்றால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் சென்றோம். நான் கொடுத்த புகாரில் ரூ.60000 சீட்டில் எவ்வுளவு பணம்,எத்தனை வாரம் செலுத்தி உள்ளேன் என்ற விவரத்தை தெளிவாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சீட்டு பணத்தில் பாதிக்கபட்டதாக சொல்லும் நபர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் நான் செலுத்தக்கூடிய பணம் கழிவு தொகைக்கு ஏற்ப மாறுபடும் என்றால் சரிதான்.

ஒவ்வொரு வாரம் எவ்வுளவு பணம் செலுத்தினேன் என்ற விவரத்தை புகார் மனுவில் சொல்லி இருந்தேன் என்றால் சரிதான். மாயவன் கோவிலில் தற்போது அரசியல் கட்சியில் ஒன்றிய செயலாளராக இருக்கும்

மகேஷ் மாயவன் என்பவரும் கோவிலை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரிதான். தற்போது கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக மகேஷ் மாயவனுக்கும், எதிரி மாயவநாதனுக்கும் பிரச்சினை உள்ளது என்றால் நான் கிறிஸ்துவர் என்பதால் எனக்கு தெரியாது. 2 வது சீட்டு கோவில் நலனுக்காக நிர்வாகஸ்தரால் எடுத்துகொள்ளப்படும் என்றால் தெரியாது. மாயவன் கோவிலின் நிர்வாகம் அவ்வப்போது மாறி வரும் என்றால் சரிதான். மகேஷ் மாயவனும் அந்த கோவிலில் சீட்டு நடத்தினார் என்றால் நடத்தினார், 5 வருடம் இருக்கும். எதிரிகளில் ஒருவர் எந்த பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார் என்றால் திருமலையப்பபுரம் பள்ளியில் வேலை பார்க்கிறார். ஆனால் தொடர்ந்து நான் சீட்டு நடத்தியதாக சொல்லப்படும் காலத்திலிருந்தே அதே ஊரில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

எங்கேயும் ஆசிரியர் தலைமறைவாகவில்லை. மாயவநாதன் தான் தலைமறைவானார். சீட்டு பணம் யார் தரவேண்டும் என்றால் மாயவநாதன் தரவேண்டும். நான் கொடுத்த புகாரில் மாயவநாதன் தான் பணம் தரவேண்டும் என கொடுத்தேனா என்றால் இருவரும் சீட்டு நடத்தினார்கள் என்று கொடுத்தேன். மாயவநாதன் பணம் தரவேண்டும் என கொடுத்தேன். இதற்கு முன்பு மாயவன் நடத்திய சீட்டு பணத்தை தந்துவிட்டார். பணம் தராத காலகட்டத்தில் இருவரும் சீட்டு நடத்தினார்கள். ஆனால் தனித்தனியாக சீட்டு நடத்தினார்கள். நான் சீட்டு பணம் போட்டது மாயவநாதனிடம். நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். சீட்டு பணத்தை நான் தான் கொண்டு கொடுப்பேன். நான் சொல்வது போல் எவ்வித சீட்டு பணமும் இந்த எதிரிகள் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் 2019 ம் வருடம் 10 வது மாதம் கடைசி மதியம் புகார் கொடுத்தேன். என்னை விசாரித்தது பெண் போலிஸ். நான் புகார் பெண் போலிஸிடம் கொடுத்தேன். நான் சொல்வது போல் மாயவன் கோவிலில் வைத்து இந்த எதிரிகள் எவ்வித சீட்டு பணமும் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் கொடுத்திருப்பதாக சொல்லும் சீட்டு பணத்தை அவர்கள் நோட்டில் வரவு வைத்திருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2018 ம் ஆண்டு மே மாதம் சீட்டு ஆரம்பித்தார்கள். ஒரு சீட்டிற்கு ரூ.500 கட்டுவேன். கழிவு தந்து விடுவார்கள். 38 வாரங்களில் சீட்டு எடுத்த ஆட்கள் பணத்தை திருப்பி கட்டவில்லை என்றால் சரிதான். இந்த சீட்டிற்கு முன்பு நான் செலுத்திய சீட்டு பணத்தை தந்து விட்டார்கள். நான் மாயவன் கோவிலில் வரிதாரர் கிடையாது. போலிஸ் விசாரணையில் நான் கோயிலில் வரிதாரர் என சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை விசாரித்த போலிஸாரிடம் ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு ரூபாய் செலுத்தினேன் என பேப்பரில் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். போலிஸ் என்னை

காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். ஒரு மணி நேரம் விசாரித்திருப்பாரா என்றால் விசாரித்திருப்பார். ஒவ்வொரு வாரமும் ஏல கழிவுத்தொகையை கையில் கொடுத்துவிடுவார்கள் என்றால் வாங்குபவர்கள் வாங்குவார்கள். நான் விட்டுவிட்டு வந்து பின்பு கழித்து கொள்வேன். ஏலம் எடுத்த ஆட்களுக்கு அன்றைய தினமே பணத்தை கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். என்னுடன் சீட்டு போட்ட அனைவருக்கும் 38 வாரம் முடிந்திருக்கும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் இந்த வழக்கிற்கும், 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி எவ்வித சீட்டும் நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி எந்த காலத்திலும் தலைமறைவாக செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அந்த எதிரியோ அவருக்கு வேண்டபட்டவர் யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த வேலைக்கும் செல்லாததால் என்னால் வாரம் ரூ.4500 செலுத்த முடியாது என்றால் என் பிள்ளைகள் கொடுத்து கட்டுவேன். ரூ.4500 வாரண்ட் கட்டியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi